DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, PALLADAM

Calender

Miscellaneous Case No:CC 42 of 2016
Preliminary Register

Sessions

Deposition of Witness for PW 7

Name : திரு.கோவிந்தராஜ்

Age : 39

Father's/Husband's Name : பழனிச்சாமி

Village : கண்டியன்கோவில்

Taluk : பல்லடம்

Occupation : தேங்காய் மண்டி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of August 2021

முதல் விசாரணை: நாள்: 04.09.2021

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தேங்காய் மண்டி வைத்து தொழில் செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை, சுமார் 5 வருடத்திற்கு முன்பு தொங்குட்டிபாளையம் அருகே எனக்கு சொந்தமான வேன் ஒருவர்மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது. அந்த வேனை ஓட்டிச்சென்ற நபர் செந்தில்குமார் என்று தெரிந்துகொண்டேன். ஆஜர் எதிரி செந்தில்குமார்தான் அன்றையதினம் வேனை ஓட்டிச்சென்ற நபர் ஆவார். வேனின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. இதுகுறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:

நான் மொத்தம் 6 வண்டிகள் வைத்துள்ளேன். என்னுடைய அலுவலகத்தில் நான் வைத்து நடத்தும் வாகனங்களை கவனித்துக்கொள்ள தனியாக ஒரு மேலாளர் உள்ளார் என்றால் சரிதான். வாகனங்கள் எங்கு செல்கிறது என்ற விவரம் அனைத்தும் மேலாளருக்குத்தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று வண்டியை யார் ஓட்டினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசாரும் என்னை விசாரிக்கவில்லை.

மறுவிசாரணை:

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/து.ஹரிராம்
நீதித்துறை நடுவர்
பல்லடம்